TNPSC JOB

| 8 - ஆம் வகுப்பு | அரையாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2:30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100 |

## பகுதி - 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **15 x 1 = 15**

1. மலர்களிலிருந்து வரும் _____ வண்டுகளை ஈர்க்கும்.
   அ) மந்தம் ஆ) சந்தம் இ) அந்தம் ஈ) கந்தம்
2. கதிரவனின் மற்றொரு பெயர் _____
   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சனி ஈ) செவ்வாய்
3. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. - இத்தொடரிலுள்ள வினைமுற்று _____
   அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது
4. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் _____
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
5. நோய்கள் பெருக மனிதன் _____ விட்டு விலகியதுதான் முதன்மைக் காரணமாகும்.
   அ) வீட்டை ஆ) உணவை இ) நாட்டை ஈ) இயற்கையை
6. இயற்கை ஓவியம் _____
   அ) சிந்தாமணி ஆ) பெரியபுராணம் இ) பத்துப்பாட்டு ஈ) கம்பராமாயணம்
7. கீழ்க்கண்ட சொற்களில் பெயரெச்சம் _____
   அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
8. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) கச+டற ஆ) கசடு+அற இ) கசடு+டற ஈ) கச+அற
9. தோட்டத்தில் தம்பி விதைத்த _____ எல்லாம் முளைத்தன.
   அ) செடிகள் ஆ) கொடிகள் இ) மரங்கள் ஈ) வித்துகள்
10. சேரர்களின் தலைநகரம் _____
    அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
11. பகைவன்+என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______
    அ) பகைவன்என்றாலும் ஆ) பகைவனென்றாலும்
    இ) பகைவன்னென்றாலும் ஈ) பகையென்றாலும்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

*ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவருக்கு உதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*
*பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை*

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் _____
    அ) தேவாரம் ஆ) தேம்பாவணி இ) கலித்தொகை ஈ) தொல்காப்பியம்
13. இப்பாடலின் ஆசிரியர் _____
    அ) நல்லந்துவனார் ஆ) ஆலங்குடி சோமு இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
14. 'அலந்தவர்' என்பதன் பொருள் _____
    அ) பணக்காரர் ஆ) உதவுதல் இ) இசை ஈ) வறியவர்
15. இதில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள் _____
    அ) ஆற்றுதல்-அலந்தவருக்கு ஆ) பண்பு-பாடறிந்து
    இ) ஆற்றுதல்-போற்றுதல் ஈ) அன்பு - கிளை



Scanned with Cam
TNPSC JOB | www.tnpscjob.com

## பகுதி-II பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

**வினா எண்: 21 கட்டாயமாக விடையளிக்கவும்**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
    அ) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
    ஆ) சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களைக் கொண்டது
17. இரட்டுற மொழிதல் அணி என்பது யாது?
18. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு யாது?
19. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
20. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
21. 'விடல்' என முடியும் குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. மயங்கொலி எழுத்துகள் யாவை?
23. தன்வினை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக
24. மெய்யெழுத்துகள் பிறக்கும் இடங்கள் யாவை?
25. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க
    அ) ஆ _____ (நிரை / மந்தை) ஆ) சோறு _____ (தின் / உண்)
26. அகர வரிசைப்படுத்துக.
    படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி
27. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.
    அ) வருக ஆ) சென்றனர்
28. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக
    தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்.

## பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க கூறும் செய்திகளை எழுதுக.
30. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

    மண்பாண்டங்களில் சமைத்தால் உணவு நல்ல சுவையுடன் இருக்கும். மேலும் உடல் நலத்திற்கும் நல்லது. மண்பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். இப்போது மண்பாண்டங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது. ஆனால் இன்னும் திருவிழாக்களிலும், சமயச்சடங்குகளிலும் மண்பானைகளே பயன்பட்டு வருவது சற்று ஆறுதல் அளிக்கிறது. மண்பாண்டக் கலையின் இன்னொரு வளர்ச்சி நிலைதான் சுடுமண் சிற்பக்கலை.

    அ) தற்காலத்தில் மண்பானைகளை எங்கு பயன்படுத்துகிறோம்?
    ஆ) மண்பாண்டக் கலையின் மற்றொரு வளர்ச்சி நிலை என்ன?
    இ) உணவு நல்ல சுவையுடன் இருக்க எதில் சமைக்கலாம்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**[வினா எண்: 34 கட்டாயமாக விடையளிக்கவும்]** **2 x 3 = 6**

32. சான்றோர்க்கு அழகு எது? பழியின்றி வாழும் வழி எது? என்பதைப் பற்றி திருக்குறள் கூறுவது யாது?
33. ஏட்டில் எழுதிய பழங்கதைகளாக முடிந்தவை எவை?
34. அடிபிறழாமல் எழுதுக.
    அ) 'மாமழை' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக **(அல்லது)**
    ஆ) 'வாழ்க நிரந்தரம்!' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

36. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

37. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து - இதில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. அ) புத்தியைத் தீட்டி வாழவேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**(அல்லது)**

ஆ) இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

39. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கலைத் திருவிழா போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் தோழிக்குப் பாராட்டு கடிதம் எழுதுக.

40. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ. சிரம் என்பது_____ (தலை / தளை)

ஆ. இலைக்கு வேறுபெயர்_____ (தளை / தழை)

இ. வண்டி இழுப்பது_____ (காலை / காளை)

ஈ. கடலுக்கு வேறு பெயர்_____ (பரவை / பறவை)

உ. பறவை வானில்_____ (பறந்தது / பரந்தது)

41. பின்வரும் மரபுத்தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

அ) ஆயிரங்காலத்துப் பயிர் - இயலாத செயல்

ஆ) கல்லில் நார் உரித்தல் - ஆராய்ந்து பாராமல்

இ) கம்பி நீட்டுதல் - இருப்பது போல் தோன்றும்; ஆனால் இருக்காது

ஈ) கானல் நீர் - நீண்ட காலமாக இருப்பது

உ) கண்ணை மூடிக்கொண்டு - விரைந்து வெளியேறுதல்

42. அ) பள்ளியில் நீங்கள் செய்யும் நற்செயல்கள் ஏதேனும் ஐந்தினைப் பட்டியலிடுக

**(அல்லது)**

ஆ) படிப்போம்; பயன்படுத்துவோம்!

1) Consonant 2) Medicinal plant 3) Punctuation 4) Dyeing 5) Artisan

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழக கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

44. அ) காற்றுக் கருவிகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவனின் கதையைச் சுருக்கி எழுதுக.

45. கட்டுரை எழுதுக.

அ) எனது தாய்மொழி **(அல்லது)** ஆ) உழவே உயர்வு.



Scanned with Cam